**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 12 (2021) | இலங்கை வரலாறு | புள்ளித்திட்டம் |
| --- | --- | --- |



## பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1) 4 | 6) 3 | 11) 1 | 16) 2 |
| 2) 5 | 7) 5 | 12) 2 | 17) 1 |
| 3) 3 | 8) 5 | 13) 3 | 18) 5 |
| 4) 5 | 9) 4 | 14) 4 | 19) 1 |
| 5) 2 | 10) 3 | 15) 5 | 20) 3 |

## பகுதி - II பகுதி A

01. எந்தவொரு சமுதாயத்திலும் எழுத்துத் தோன்றுவதற்கு முன்னுள்ள காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனக் குறிப்பிடப்பட்டது.

- கல்லாயுதப் பயன்பாடு
- நாடோடி வாழ்க்கை முறை
- மாமிச உணவுகளை உட்கொள்ளல் அதிகமாகக் காணப்படல்
- கல்தொழிநுட்பம் குறிப்பிடல் வேண்டும்
- வாழ்க்கை முறை குறிப்பிடல் வேண்டும்
- மரணச்சடங்குமுறை குறிப்பிடல் வேண்டும்

02. **குடியிருப்பு**

- முன்வரலாற்றுக் காலத்தில் அலைந்து திரிந்து, வேட்டையாடிய வாழ்க்கை முறையிலிருந்து மீண்டு இக்காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக நிரந்தரமான வசிப்பிடங்களை அமைத்துக் கொள்ள ஆரம்பித்தனர்.
- ஆதிகளவான குடியிருப்புக்கள் உலர் வலயத்தில் நிதிக்கரைகளை அண்டிய பரவிக் காணப்பட்டதற்கான ஆதாரங்களுள்ளன.
- கி.மு 900 இல் அநுராதபுரத்தில் இரு?ந்த முன்வரலாற்றுக்கால குடியிருப்புக்கள் 10 ஹெக்டயர் பிரதேசத்தில் பரந்து காணப்பட்டதுடன் கி.பி 700 – 600 வகையான காலத்தில் 50 ஹெக்டெயர் வரை விருத்தியுற்று சென்றது.
- உடரஞ்சாமடம் பிரதேசத்தில் கண்டறியப்பட்ட குடியிருப்பு, மண் வீடுகளால் ஆனவை. மண்ணினால் சுவர் கட்டப்பட்டு புற்களினால் கூரை வேயப்பட்டு, முறையாகக் கட்டப்பட்டிருந்ததற்கான ஆதாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.
- அநுராதபுர உள்நகரில் கண்டறியப்பட்ட வீடு அரை வட்டவடிவிலும் சதுர வடிவிலும் காணப்படுகின்றது.

agaram.lk

**தொழினுட்பம் :**

- கல்லாயுத தொழிநுட்பத்திலிருந்து மீண்டு இரும்புத் தொழிநுட்பத்தை நோக்கிச் செல்வது துலக்கமாய் தெரிகிறது.
- விவசாயத்திற்கு தேவையான மண்வெட்டி, கலப்பை, கத்தி ஆகிய உபகரணங்களை இரும்பினால் உற்பத்தி செய்து கொண்டுள்ளனர்.
- வனைதல் சில்லைக் கண்டறிந்தனால் உயர் தொழிநுட்பத்துடன் மட்பாண்டங்கள் உற்பத்தி செய்தனர்.
- மட்பாண்டங்களை உணவைச் சமைப்பதற்கும், இறந்தவர்களின் அஸ்தியை பாதுகாத்து வைப்பதற்கு பயன்படுத்தியுள்ளனர்.
- செப்பு உலோகத்தை பயன்படுத்தி வளையல் போன்ற ஆபரணங்களை உற்பத்தி செய்துள்ளனர்.
- இந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கருஞ்சிவப்பு மட்பாண்டங்கள் இந்தியாவின் கருஞ்சிவப்பு மட்பாண்டங்களுக்கு சமனானவையாகும்.

**வாழ்க்கை முறை :**

1. வேட்டையாடுதலை முற்றாகக் கைவிடாவிட்டாலும் அதிலிருந்து மீண்டு உணவு உற்பத்திக்காக விவசாய வாழ்க்கை முறைக்கு வந்தனர்.
2. சேனைப்பயிர்ச் செய்கையும் ஆரம்பிக்கப்பட்டு பரவலடைந்தன உணவுப் பொருட்களின் உற்பத்தியடன் நிலையான குடியிருப்புக்களை உருவாக்கிக் கொள்வதுடன் சிறிய கிராமங்கள் உருவாகத் தொடங்கின.
3. விவசாயம், போக்கவரத்து, உணவுத் தேவைக்காக மாடு, குதிரை, ஆடு போன்ற பிராணிகளை வளர்க்கத் தொடங்கினர்

03. பொருத்தமான சிறு குறிப்புகளுக்கு ஐந்து புள்ளி வீதம் வழங்கவும்.

## பகுதி – C

04.

1) இராசரட்டை நாகரிகம் விவசாயத்தையும், வர்த்தகத்தையும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையைக் கொண்டிருந்தது.

2) 1215ம் ஆண்டு வரை பெருமளவுக்கு இந்நாட்டின் குடியிருப்புகள் பரவியிருந்தது தாழ்நாட்டு உலர்வலயத்திலாகும் வடகீழ் பருவகாற்றால் வருடத்தில் ஒரு போகத்திற்கு கிடைக்கும் மழைவீழ்ச்சியைச் சேகரித்து விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வந்தனர். உலர் வலயத்தில் காணப்பட்ட புவியியல் வேறுபாட்டை விவசாயத்திற்கு நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு அம்மக்கள் தெரிந்து வைத்திருந்தபடியால் உயர்வான நிலங்களில் குளங்களை அமைத்துஈ தாழ்ந்த பரந்த சமவெளிப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர். குளங்களிலிருந்து விவசாய நிலங்களுக்கு நீரை எடுத்துச் செல்வதற்காக நீண்ட கால்வாய்களை உருவாக்கினர். ஆதனால் நீர்ப்பாசன நாகரிகமொன்று தோற்றம் பெற்றது. விவசாயம் இராசரட்டை பொருளாதாரத்தின் அடிப்படையாகும்.

3) இலங்கையின் அமைவிடத்தின்படி அது இந்தியா, கிழக்காசியா, ஐரோப்பாவுக்கான பாதையின் மையத்தில் அமைந்திருந்தது. இந்நிலை வெளிநாட்டு வர்த்தகத்திற்கு மிகவும் வாய்ப்பாயிருந்தது. அக்கால வர்தத்தகத்திற்குப் பயன்படுத்தப்பட்ட பாய்மரம் படகுகளுக்குப் பொருத்தமான குடாக்கள், கப்பல்கள் தரித்து நிற்பதற்கான துறைமுகங்கள் பசவும் நாட்டைச் சுற்றிலும் அமைந்திருந்தன. அத்துறைமுகங்களை உள்நாட்டுடன் தொடர்படுவதற்கான பாதைத் தொகுயொன்றும் அமைவுற்றிருந்தது. இதனால் துறைமுகத்திற்குப் பொருட்களைக் கொண்டு செல்லும் வசதியையும் அது கொண்டிருந்தது இப்பின்னணியில் இராசரட்டை காலத்தில் உலகின் பல்வேறு நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளை மேற்கொள்வதற்கு இலங்கையரால் இயலுமாயிருந்தது. இதனால் வியாபாரம் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கத் தொடங்கியது.

இராசரட்டை நாகரிக காலத்தில் கலாசாரக்கட்டமைப்பு உருவானது பெருமளவுக்கு இந்தியச் செல்வாக்கினாலாகும் என்றாலட இந்தியாவில் காணப்பட்ட பல்வேறுபட்ட கலாசார முறைகள் இலங்கையின் சமய, சமூக சூழலுக்குப் பொருத்தமாக வளர்ச்சியுற தொடங்கின உதாரணமாக சமயம், கலை, வீடமைப்பு, பழக்கவழக்கம், கல்வி, நிர்வாகம் போன்ற பிரிவுகளிலான தகவல்கள், இராசரட்டை நாகரிகத்தின் அரசியல், பொருளியல், சமூக, கலாசார, தொழினுட்ப செயற்பாடுகளைக் குறிப்பிடல் வேண்டும்.

05. 1)

★ இந்நாட்டில் ஆரம்பக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட பின்னர் பிரதான வாழ்வாதாரமாக இருந்த விவசாயத்தை முன்னெடுத்துச் செல்வதில் நீர்பாசனம் முக்கிய இடம் வகித்தது.

★ கிராமியக் குளங்கள், சிறு குளங்கள் என்பன ஆரம்பமான காலம் முதற் கொண்டே நீர்பாசனம் தொடர்பாக ஆட்சியாளர்கள் அனுசரனை வழங்கியதடன் அதனைத் தமது முக்கிய கடமையாகவும் எண்ணிச் செயற்பட்டமை. (காமினிவாவி, அயவாவி, ஜயவாவி)

★ அதிகரித்து வந்த சனத்தொகையின் தேவைக்கு ஏற்ப ஆறுகள் வாய்க்கால்களை மறிந்து அனைகட்டி கிராமியக்குளங்கள், சிறு குளங்கள், பாரியகுளங்கள் என்கபவற்றை அமைத்துப் நீர்ப்பாசப் பணியை முன்னெடுத்துச் சென்றமை.

★ கி.மு 3ம் நூற்றாண்டு முதல் கி.பி 6ம் நூற்றாண்டு வரை நீர்பாசனப் பணிக்குப் பங்களிப்புச் செய்தோர் பின்வருவோராவார்.

1. தேவநம்பியதீசன் - தீசவாவி
2. வசபன் - மகாவிலச்சிய நொச்சிப் பொத்தான, ஹிரிவடுண்ன
3. மகாசேனன் - மின்னேரியா, ஹிருரு வாவி, கவுடுருவாவி
4. 1ம் உபதீசன் - தோப்பாவாவி
5. தாதுசேனன் - கலாவாவி, பலலுவாவி, மானாமடு
6. 2ஆம் மொகல்லானன் - நாச்சதுவவாவி, பதவியா
7. 2ஆம் அக்ரபோதி – மினிப்பே அணை

★ நீர்பாசனம் தொடர்பாக இருந்த அமைப்புகள் அவற்றில் இருந்து பெறப்பட்ட பொருளாதார நன்மைகள்

**1) நீர்ப்பாசனத் தொழினுட்பத்திறன்**

★ பல திசைகளிலும் பாய்ந்து சென்ற ஆற்றுநீரை ஒன்று சேர்த்து நீர்ப்பாசனத் தொகுதியை அமைத்தமை.

★ நிலங்களின் அமைப்பை நன்கு அறிந்திருந்தமை.

★ செயற்கைக் கால்வாய்களை அமைத்துக் குளங்களை இணைத்தமை (எலகரக்கால்வாய், யோத எலக்கால்வாய்)

★ ஆற்றுக்குக் குறுக்காக அனை கட்டுதல் (எலகர, மினிப்பே, மாகல்கடவல)

★ குளக்கட்டு, மடைக்கதவு, அலைதாங்கி, கலிங்கத் தொட்டி, போன்றவற்றை நிர்மானித்தமை மூலம் தொழில்நுட்ப அறிவு வெளிப்படுத்தப்படுகின்றது.

agaram.lk

06.

1. சோழர்களது ஆட்சியின் கீழிருந்த இராசரட்டை மக்கள் வரி செலுத்தாது ஏற்படத்திய கலவரத்தை அடக்குவதற்கு இந்தியாவிலிருந்து வந்து சோழப்படை உருகுணையையும் ஆக்கிரமித்தல்.
2. விஜயபாகுவின் ரவிநேவட, சல என்ற இரு சிங்கள சேனாதிபதிகள் தமது சேனையுடன் சோழருடன் சேர்ந்து கொள்ளுதல்.
3. புலட்டுப்பான (பலுட்டகிரி) என்ற இடத்தில் நடந்த போரில் 1ஆம் விஜயபாகு வெற்றியடைந்ததுடன் பெரும் செல்வத்தையும் சோழர்களிடமிரந்து கைப்பற்றினான். பொலன்னறுவையும் வெற்றி கொள்ளப்பட்டது.
4. கி.பி 1063 – 1069 க்கும் இடையில் இராஜேந்திரசோழன் மீண்டு சோழரது ஆட்சியை நிலைநாட்டும் பொருட்டுபடையொன்றை அனுப்புதல் அந்த படையால் விஜயபாகு தோற்கடிக்கப்பட்டு வாகிரிகலவிற்குப் பின்வாங்குதல்.
5. கேசதாது, காசியப்பனின் சகோதரர்களுள் ஒருவன் குந்தகசாலயில் கலவரமொன்றை ஏற்படுத்துதல், அதனை அடக்குதல்.
6. மகாநாகருலவில் தன் படையை விஜயபாகு பலர்ப்படுத்திக் கொள்ளல்.
7. இராஜேந்திர சோழன் இறந்தால் ஏற்பட்ட சோழரது ஆட்சி வீழ்ச்சியைப் பயன்படுத்திய விஜயபாகு மூன்று மார்க்கமாக பொலன்னறுவை தாக்கி 1 ½ மாதங்களில் சோழரை வெற்றி கொண்டான்.
8. பொலன்னறுவையைத் தாக்கும் போது ரவிதேவ், சல என்ற சிங்கள சேனாதிபதிகள் மீண்டும் சிங்கப்படையுடன் இணைந்து கொண்டனர்.
9. கி.பி 1070 இல் சோழரை தோற்கடித்த விஜயபாகு வெளிநாட்டவர் ஆட்சியினின்று இலங்கையை மீட்டான்.
10. வீழ்ச்சியடைந்திருந்த விவசாயத்தை மேம்படுத்தினான்.
11. இலக்கிய வளர்ச்சியின் பொருட்டுப் புலவர்களுக்குப் பரிசில்களாக கிராமங்களை வழங்கினான் ஏழைகளுக்கு உதவினான் உயிரினங்களுக்குப் பாதுகாப்பு வழங்கினான்.

**1) சமய நடவடிக்கைகள்**

- ★ பர்மாவிலிந்து உபசம்பதா பிக்குகளை வரவழைத்து இங்கு மீண்டும் உபசம்பதா சடங்கினை நடாத்தினான். பிக்கு சாசனத்தை மீளமைக்கு பொருட்டு பர்மாவிலிருந்து உதவி பெற்றான்
- ★ தேவையான திரிபீடக நூல்களைப் பர்மாவிலிருந்து கொண்டுவரச் செய்து திரிபிடகத்தை எழுதுவித்தான்
- ★ ஆரச மாளிகைக்கு வடக்கில் தலதா மாளிகையை அமைத்து வருடாந்தம் தலதாமாளிகை பூஜை நிகழ்வித்தான்.
- ★ ஜம்புகோள,மெதிரிகிரி, மகியங்கனை, கசாகல்ல விகாரை, தெவிநுவர வேலகாம, விகாரை என்பவற்றை புனருத்தாரணம் செய்தான்.
- ★ விகாரைகளைப் பராமரிப்பதற்குக் கிராமங்களை மானியமாக வழங்கினான் திஸ்ஸமகாராமையில் சந்தகிரி விகாரை, நெவிநுவரயில் உருவெல விகாரை ஆகியவற்றை நிறுவினான்.
- ★ அந்தரவிட்டிய, சங்காதகாமய, சிறிமண்டலகாமய ஆகிய கிராமங்களை வனவாசிப்பிரிவைச் சேர்ந்த பிக்குகருக்கு வழங்கினான்.
- ★ சிவனொளிபாதமலையத் தரிசிக்கச் செல்வோருக்கு வசதிகள் செய்து கொடுத்தான் அம்பகமுவ கல்வெட்டின்படி சிவனொலி பாதமலையின் பராமரிப்புக்கு உதவதல், பாதச்சுவட்டை பாதுகாப்பதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளல்.

07.

**1) நட்புறவு** :- கம்போடியாவுடைனான தொடர்பு, பர்மாவுடைனான சமயத் தொடர்பு
கலிங்கத்துடனான விவாகதொடர்பு
வத்தக உறவு (கம்போடியா, பர்மா, தென்னிந்தியா, சீனா)

**2) யுத்தத் தொடர்பு**

1. பர்மிய ஆக்கிரமிப்பு – பர்மியமன்னன் அலங்கிது கொல்லப்பட்டு ஈழத்துப்படைகள் வெற்றியுடன் திரும்பியதாக சூளவம்சத்தில் கூறும்.
2. பாண்டிய ஆக்கிரமிப்பு - சூளவம்சத்தில் பல போர்கள் வெற்றி பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் போரின் முடிவுபற்றிக் கூறப்படவில்லை.
3. இந்த யுத்தங்களின் விளைவுகள்
   - ★ நாட்டின் செல்வத்தின் ஒரு பகுதி போருக்காக செலவு செய்யப்பட்டமை.
   - ★ யுத்த செலவானது பொலன்னறுவையின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் அதன் வீழ்ச்சிக்கும் காரணமாகியது.
   - ★ பராக்கிரமபாகு போர் நடவடிக்கைகளுக்காக நாட்டில் பலம் வாய்ந்த சேனாதிபதிகளைத் தெரிவு செய்தான்.
   - ★ பிற்காலத்தில் இவர்கள் அரசியல் செயற்பாடுகளில் தலையிட்டனர்.

08. பொருத்தமான சிறு குறிப்புகளுக்கு ஐந்து புள்ளி வீதம் வழங்கவும்.

agaram.lk